**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S.28/2015**
**நாள்.04.07.2025**
**வா.சா.1- அம்பிகா மகேஸ்வரி**
**க/பெ - சரவணக்குமார்**

**4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் இந்த வழக்கின் 3ம் வாதி. தற்போது எனக்கு வயது 42. தாவா சொத்து எனது அப்பாவிற்கு பாகப்பிரிவின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சொத்து ஆகும்.

2. நான் தற்போது திருப்பூரில் என் கணவருடன் வசித்து வருகிறேன். சிறுவயதில் இருந்தே திண்டுக்கல்லில் குடியிருந்து வந்தோம். அவ்வப்போது முல்லாம்பட்டிக்கு சென்று வருவோம். எனது அப்பா மணி 2013ம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் இறக்கும்போது 61 வயது இருக்கும். என் அப்பா அப்போது திண்டுக்கல்லில் எங்களோடு இருந்தார். அவ்வப்போது தோட்டத்திற்கு போய் வருவார்.

3. எங்களுக்கு தாவா சொத்து தவிர வேறு சொத்துக்கள் இல்லை. எனது அண்ணன் சிவமுருகன் 2019ம் ஆண்டு இறந்துவிட்டார். சிவமுருகன் மறைவிற்கு பின்பு அவரது மனைவி ரோஜா, மகள் நாகசௌமியா ஆகியோர் திண்டுக்கல்லில் குடியிருந்து வருகின்றனர்.

4. வழக்கின் விவரம் மற்றும் வழக்கிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பற்றியும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ஆவணங்கள் எழுதப்பட்ட காலங்களில் ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் ஆவணங்கள் பற்றி எனது அம்மா சொல்லியுள்ளார், அதனால் தெரியும்.

5. 1 முதல் 3 பிரதிவாதிகள் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்துவிட்டார்கள் என்பது தான் என்னுடைய வழக்கு என்றால் சரிதான். ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்ற பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், பரிகாரத்தில் சேர்க்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

6. எனது தகப்பனார் மணி ஒரு பிச்சையம்மாளுக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பொதுஅதிகார ஆவணம்

பற்றி தெரிந்த பின்பு அதை ஆட்சேபித்து வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை. அவ்வாறு வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பவில்லை என்று 4,5 பிரதிவாதிகள் கூறுகிறார்கள் என்றால் சரியல்ல. எனது தந்தை அனுப்பினார். அவ்வாறு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பவில்லை என்றாலும், அந்த ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

7. பொது அதிகார ஆவணம் செல்லாது என்று நாளிதழில் எங்கள் தரப்பில் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. நாளிதழில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்பதால் தான் அந்த ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

8. பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்யக்கோரி வடமதுரை சார்பதிவாளர் அலுவலத்தில் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது பெற்றோர்கள் கொடுத்தார்கள். அது பற்றிய விவரம் நேரடியாக தெரியாது என்றால் எனது அப்பா சொல்லி தெரியும். மனு கொடுக்கவில்லை என்பதால் தான் அந்த ஆவணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

9. 1ம் பிரதிவாதி பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தினை 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்து விட்டார் என்றால் சரிதான், எனது பெரியப்பாவின் புகைப்பட நகலை எனது அப்பாவாக பயன்படுத்தியும், எனது தந்தையுன் கையெழுத்தையும் அவருக்கு தெரியாமல் எனது பெரியப்பாவும் சேர்ந்து பயன்படுத்தி கிரையம் செய்து கொடுத்துள்ளார்.அவ்வாறு எனது பெரியப்பா கிரையம் செய்து கொடுத்தார் என்று சொல்வது தவறு என்றாலும், எனது அப்பாதான் கிரையம் செய்து கொடுத்தார் என்றாலும் சரியல்ல.

10. அவ்வாறு பயன்படுத்தி ஆவணம் ஏற்படுத்தி இருந்தால் எனது பெரியப்பாவை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றாலும், அவ்வாறு எனது பெரியப்பா கிரையம் ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்பதால் தான் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான், எனது பெரியப்பாதான் கிரையம் செய்து கொடுத்தார்.

11. எனது பெரியப்பா தான் கிரையம் செய்து கொடுத்தார் என்ற வாதமும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிராதை படித்து பார்த்தேன்.

12. 3ம் பிரதிவாதி 2009ல் கிரையம் வாங்கியதை ஆட்சேபித்து வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் எனது அப்பா அனுப்பினார். அந்த அறிவிப்பையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

13. 3ம் பிரதிவாதி கிரையம் செய்த பின்பு எனது அப்பா மணியிடம் இருந்து ஒரு பதிவு செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தை பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. உறுதிமொழி ஆவணத்தில் உள்ள புகைப்படமும், கைரேகையும், கையெழுத்தும் எனது தகப்பனாருடையது அல்ல என ஆட்சேபித்தோம் என்று வழக்குரையில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். உறுதிமொழி ஆவணம் ஏற்படுத்தப்பட்ட பின்பு 9 ஆண்டுகளாக எந் ஆட்சேபணையையும் தெரிவித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

14. தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டதற்கு எரியோடு காவல் நிலையத்தில் 2012ம் ஆண்டு கொடுக்கப்பட்ட புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் விசாரணை செய்தார்கள். அங்கு நடவடிக்கை போதுமானதல்ல என்று கருதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலத்திற்கு சென்றோம் என்றால் சரிதான். எரியோடு காவல் நிலையத்தில் விசாரணை சுமார் 7,8 மாதங்கள் விசாரணை நடந்து கொண்டிருந்தது.

15. 02.03.2012ம் தேதி திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான்.

16. தாவா சொத்தை 3ம் பிரதிவாதியிடம் இருந்து 4,5 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய விவரம் எப்போது தெரியும் என்றால் கிரையம் வாங்கிய உடனே தெரியும்.

17. 4,5 பிரதிவாதிகள் 2010ம் ஆண்டு கிரையம் வாங்கிய பின்பு அதை ஆட்சேபித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வில்லைஎன்றால் சரியல்ல. அம்மா கொடுத்தார்கள். புகார் அளித்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

18. தாவா சொத்து சம்பந்தமாக வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19. 4,5 பிரதிவாதிகள் அவரவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றாலும், அது சம்பந்தமாக ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆட்சேபணை செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

20. 4,5 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பின்பு தாவா சொத்தில் கம்பி வேலி அமைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, எங்கள் அனுபவத்தில் உள்ளது. எங்கள் அனுபவத்தில் உள்ளதற்கு வருவாய் துறை ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

21. மேற்படி விவரங்கள் எனது தகப்பனாருக்கு தெரியும் என்றாலும், எனது தகப்பனார் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்த விவரம் நன்கு தெரியும் என்றாலும், அதை மறைத்து 4,5 பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

22. வா.சா.ஆ.7 ஆவணம் வழக்கு நிலுவையில் இருந்த போது வழக்கிற்காக நாங்கள் உற்பத்தி செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட மனுவை எரியோடு காவல் நிலையத்திற்கு அனுப்பி அந்த புகார் மனு மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரத்தையும், அதன் பின்பு எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரத்தையும் தாவா பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

23. திண்டுக்கல் குற்றவியல் நீதிமன்ற நடுவர் எண்.2 ல் தனி புகார் மனு தான் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனி புகார் மனுவில் எதிரிகளாக 4,5 பிரதிவாதிகளை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தனி புகார் மனுவையும், அதன் பின்பு எடுக்கப்பட்ட

நடவடிக்கைகளையும் ஆவணமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

24. வழக்கு தாக்கல் செய்த 10 ஆண்டுகளிலும், அதற்கு முன்பு ஆவணம் ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்தும், மோசடியான ஆவணம் என்று சொல்லப்படும் கிரைய ஆவணத்தில் உள்ள போட்டோ மற்றும் கையெழுத்து எனது தந்தைக்குரியது அல்ல என்று கண்டறிய தடயவியல் பகுப்பாய்விற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் தெரியாது. என் அம்மா அதுபற்றி சொல்லவில்லை.

25. உண்மையிலேயே எனது தந்தையின் போட்டோ மற்றும் கையெழுத்து இல்லை என்றால் நடவடிக்கை எடுத்திருப்போம் என்றாலும், அதை தெரிந்து வழக்கிற்காக வீண் வாதம் செய்கிறோம் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**